

# இயற்கையுடன் இயைந்திருத்தல்

அன்பிற்குரிய தாஜி

வழங்கிய அருட்செய்தி

பூஜ்யஸ்ரீ சாரிஜி மகராஜ் அவர்களின்

98வது பிறந்தநாள் ஆண்டு விழா

24 ஜூலை 2025, கான்ஹா சாந்தி வனம்

# இயற்கையுடன் இயைந்திருத்தல்

அன்பார்ந்த நண்பர்களே,

## விட்டுச்செல்ல அனுமதிப்பதே வளர்ச்சி

நாம் ஒரு விதையைப் பார்க்கும்போது, அதில் மறைந்துள்ள உண்மையைக் காண்கிறோம். மரமாக வளர்வதற்குத் தேவையான வேர்கள், தண்டுப்பகுதி, கிளைகள், இலைகள், மலர்கள் என அனைத்தையும் அந்த விதை தன்னுள் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த விதை, உண்மையில் எதுவாக மாற வேண்டுமோ, அதற்கு அது பிளவுபட வேண்டும். அது தன்னைப் பாதுகாக்கும் மேல்உறையை பற்றிக்கொள்ளாமல் விட்டுவிட வேண்டும். விட்டுவிட அனுமதிக்கும் போதுதான் ஜீவிதம் தொடங்குகிறது.

இயற்கையின் முதல் பாடம் இதுதான்: விட்டுச்செல்ல அனுமதிப்பதே வளர்ச்சியாகும்.

மரம் எனும் அன்னை, இதனை நன்கு அறிந்துள்ளாள். இலையுதிர் காலம் வரும்போது அவள் தன் இலைகளைப் பற்றிக்கொண்டு இருப்பதில்லை. அவை விட்டுச்செல்ல

கருணையுடன் அனுமதித்து, புதியவை வளர்வதற்கு இடம் அளிக்கிறாள். இறுக்கமாகப் பற்றிக்கொண்டு இருப்பது, புதிய ஜீவிதம் உருவாவதைத்  தடுக்கிறது. நாம் பெரும்பாலும் மறந்துவிடும் இதனை அவள் அறிந்துள்ளாள்.

அன்னையின் இதயமும், இதனை நன்கு அறிந்துள்ளது. ஒன்பது மாதங்களுக்கு இரண்டு இதயங்களும் ஒன்றாக துடிக்கின்றன. பின்னர் பிரசவிக்கும் தருணத்தில் நிகழ்வதே, விட்டுச்செல்ல அனுமதிக்கும் அன்பான செயலின் வெளிப்பாடு. அவளில் ஒரு பகுதியாக இருந்த ஒன்றை அவள் விட்டுச்செல்ல அனுமதிக்கிறாள். அன்பு இல்லாததால் அல்ல, அதன் மீதுள்ள அளவற்ற அன்பினால்தான். முன்பு ஒன்று என இருந்தவர்கள், இப்போது இருவர் ஆகினர், அவர்கள் என்றென்றும் அன்பு செலுத்துபவர்களாக இருப்பர்.

## அன்பின் சுழற்சி

மூன்று எளிய நிதர்சனங்கள், முடிவில்லாத சுழற்சியை உருவாக்குகின்றன:

1. விட்டுச்செல்ல அனுமதிப்பதே வளர்ச்சி.
2. வளர்ச்சியின் மூலம் அன்பு, தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.
3. அன்பு செலுத்துதல் என்பது கட்டுப்படுத்துதலை விட்டுவிட அனுமதிப்பது.

சுவாசித்தலைப் போன்று, ஒவ்வொன்றும் அடுத்த படிநிலைக்கு இட்டுச் செல்கிறது: மூச்சை உள்ளிழுப்பது, வெளியில் விடுவது, பின் மீண்டும் மூச்சை உள்ளிழுப்பது. வாழ்க்கையும் இவ்வாறுதான் நகர்ந்து செல்கிறது.

ஒரு பாடல், ஒரு ஓவியம் அல்லது ஒரு உறவுமுறை போன்ற ஒன்றை நாம் உருவாக்கும்போது, அன்பை வெளிப்படுத்துகிறோம். அன்பு, தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும் தேவை ஏற்படும்போது, உருவாக்கத்திற்கான உந்துதல் ஏற்படுகிறது. ‘பிக் பேங்க்’ எனப்படும் பேரதிர்வில்கூட, அன்பானது பல வழிகளில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது.

அன்புதான் வளர்ச்சிக்கு உதவுகிறது. “உலகை இயக்குகின்ற சக்தி அன்புதான்”, என சாரிஜி சொல்வது வழக்கம்.



ஒரு பாடல், ஒரு ஓவியம் அல்லது ஒரு உறவுமுறை போன்ற ஒன்றை நாம் உருவாக்கும்போது, அன்பை வெளிப்படுத்துகிறோம். அன்பு, தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும் தேவை ஏற்படும்போது, உருவாக்கத்திற்கான உந்துதல் ஏற்படுகிறது.

## முரண்பாடு

இதில் ஒரு பெரிய முரண்பாடு உள்ளது: ஒருவரை நீங்கள் உண்மையில் நேசிப்பதற்கு, அவர் விட்டுச்செல்லவும் அனுமதிக்க வேண்டும். முதலில் இது செய்ய முடியாத ஒன்றாகத் தோன்றும். நாம் எவ்வாறு ஒரே சமயத்தில் நேசிக்கவும், விட்டுச்செல்ல அனுமதிக்கவும் இயலும்?

இதைப் பற்றி சிந்தியுங்கள்: ரோஜா மொட்டினைப் பாதுகாத்து மூடி இருக்கும் இதழ்கள் திறக்கவில்லை எனில், அது மலர்ந்திடுமா? வண்ணத்துப்பூச்சியின் கூடு தன் நூலிழைகளை விட்டுவிடாமல் இருந்தால், வண்ணத்துப்பூச்சி வெளிவர இயலுமா? குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்தியாக

வேண்டும் என நினைத்தால், உண்மையில் இதயங்கள் இணைய முடியுமா?

உண்மையான அன்பில், எதிர்பார்ப்புகளோ, கோரிக்கைகளோ அல்லது கட்டுண்டிருக்கச் செய்யும் சங்கிலிகளோ இருக்காது. அது சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கிறது. உண்மையான பற்றின்மை என்பது அலட்சியமான மனோபாவத்துடன் இருப்பது அல்ல. அதில் உள்ள அன்பு உங்களை உடைமையாக்கிக் கொள்ளாமல், சுதந்திரமாக இருக்கச் செய்யும் அளவிற்கு மிகவும் வலுவானது.

பெரும்பாலும் நாம் அன்பையும், பற்றுதலையும் குழப்பிக் கொள்கிறோம். பற்றுதல் என்பது அன்பைச் சுற்றியுள்ள உறையாகும், அது உங்களை பயத்தில் ஆழ்த்துகிறது. அது அக்கறை என்ற பெயரில், கூண்டுகளை உருவாக்குகிறது, அது பேரன்பு என்று தன்னை அழைத்துக்கொண்டு, பிறரை சார்ந்திருக்கச் செய்கிறது.

இதனை தாவரங்கள் நன்கு அறிந்துள்ளன. அவை தனது நறுமணத்தை காற்று எடுத்துச்செல்லும் என்பதை அறிந்துள்ளன. தனது கிளையில் உள்ள கனிகள் இறுதியில் விழுந்துவிடும் என்பதை அறிந்துள்ளன. ஆனால் அவை இவற்றை எதிர்த்துப் போராடுவதில்லை. அவை இன்னும் பெரிதாக வளர்ந்துகொண்டே செல்கின்றன. வளர்வது, சுதந்திரமாக இருக்க அனுமதிப்பது, அதிக உயிர்களை உருவாக்குவது - இவையாவும் அவற்றின் இயல்பு.

## மனிதராக இருப்பதில் உள்ள சவால்

மனிதர்களாகிய நாம் நமக்கானவற்றை தேர்வு செய்யவும், நம்மை பற்றிய விழிப்புடன் இருக்கவும் முடியும். இருப்பினும்



நாம் மனிதர்களாக இருப்பதிலிருந்து, கருணை உள்ளவர்களாகவும், பின் தெய்வீகமானவர்களாகவும் முன்னேறுகிறோம். நாம் வளர்ச்சி அடையும்போது, படைப்பின் உண்மைத்தன்மையிலிருந்து தனித்திருப்பதற்கு மாறாக, அவற்றுடன் ஒன்றாக ஆகிறோம்.

அகங்காரம், "நான்", "எனது" என்ற உணர்வினை நம்முள் ஏற்படுத்தி, விஷயங்களை பற்றிக்கொள்ளச் செய்து, அவற்றின் அடிப்படையில் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ளச் செய்கிறது. நம்பிக்கை இன்மை, எதிர்கால பாதுகாப்பிற்காக பெருமளவில் சேகரித்து வைத்துக் கொள்ள நம்மைத் தூண்டுகிறது.

நாம் தியானம் செய்து, நமது எண்ணங்கள் மற்றும் உணர்வுகளின்மீது, அதிக விழிப்புணர்வு கொண்டவர்களாக மாறும்போது, இதுபோன்ற சங்கிலிகள் உடைபடுகின்றன. எது உண்மையானது மற்றும் உண்மையல்லாதது, எது நீடிப்பது மற்றும் நீடிக்காதது என்பதை நாம் வேறுபடுத்திப் பார்க்க கற்றுக்கொள்கிறோம். நமது சிறிய சுயத்திற்கு அப்பாற்பட்டு, அனந்தத்தைக் காணத் தொடங்குகிறோம்.

இந்த மாற்றம் அன்பினால் விளைகின்ற, அன்பான செயலாகும்.

## லாலாஜியின் வாழ்க்கையிலிருந்து

நமது ஆதிகுரு, லாலாஜி மகராஜ் அவர்கள், பற்றின்றி அன்புடன் இருத்தலின் சிறந்த எடுத்துக்காட்டு ஆவார். உதாரணமாக, ஒருமுறை கூட்டு தியானத்தை வழிநடத்துகையில், அவரது மகளின் மரணத்தைப் பற்றி அறிந்தபோது, அவர் அமைதியாக அங்கேயே அமர்ந்திருந்தார், அவர் முகத்தில் கண்ணீர் வழிந்தோடத் தொடங்கியது.

அதைக் கண்ட ஒரு துறவி, “எவ்வாறு ஒரு துறவி அழலாம்?” என்றார். எவ்வாறு அவரால் அழ முடிகிறது? ஏனெனில் அவர் அன்பு கொண்டிருக்கிறார்.

லாலாஜி, அமைதியாக சற்று நேரம் அமர்ந்துவிட்டு, சில காய்ந்த சருகுகளை எடுத்து, அவற்றை நொறுக்கினார். அவை உடைபடும் ஓசையை எழுப்பின. “உயிரற்ற இலைகள்கூட அவற்றை நொறுக்கிடும்போது ஓசை எழுப்பும், நானோ உயிருள்ள மனிதன். இணைந்துள்ள பாகங்கள் பிரியும்போது, ஓசை எழுவது இயல்பு” என்றார்.

அவர் மேலும் தொடர்ந்து, “மக்கள் சுதந்திரமாக இருந்தாலும் இல்லாவிடினும், அன்பு, அக்கறை மற்றும் பற்றுதல் ஆகியவற்றை இயல்பாகவே உணர்கின்றனர்” என கூறினார். நாம் மனிதர்களாக இருப்பதிலிருந்து, கருணை உள்ளவர்களாகவும், பின் தெய்வீகமானவர்களாகவும் முன்னேறுகிறோம். நாம் வளர்ச்சி அடையும்போது, படைப்பின் உண்மைத்தன்மையிலிருந்து தனித்திருப்பதற்கு மாறாக, அவற்றுடன் ஒன்றாக ஆகிறோம்.

இதுதான் பற்றின்றி அன்புடன் இருத்தல் ஆகும்: அன்பை ஆழமாக உணர்ந்திருக்கும் அதே வேளையில் விட்டுச்செல்ல அனுமதிக்கிறோம்.

## தவறான வழி

அன்பு இல்லாமல் பற்றற்று இருப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். அது உணர்வுகளற்றது, இடைவெளியை ஏற்படுத்தக் கூடியது, அதற்கு எவ்வித ஆன்மீக நெறிமுறையும் கிடையாது. அது ஒருவர், தான் பிரம்மச்சாரி எனவும், அதனால்

எவருடனும் நேசமாக இருக்க முடியாது எனவும் கூறுவதைப் போன்றது. இது போன்ற ஒரு இடைவெளி, உணர்ச்சிபூர்வ இயலாமையுடன் இருப்பதால் நிகழ்கின்றதே அன்றி, விவேகமிக்கவராக இருப்பதால் அல்ல.

பரிபூரண பற்றின்மை வலிமைமிக்க அன்பினால் உண்டாகிறது. அது எதையும் இழப்பதிலும் அல்லது பெறுவதிலும் அக்கறை கொள்வதில்லை. அது உணர்ச்சிபூர்வமாக சார்ந்திருக்காமல், முழுமையாகப் பங்கேற்கிறது. அது பற்றுதல் இல்லாத நெருக்கத்தையும், கட்டுண்டு இல்லாத இணைப்பையும் ஏற்படுத்துகின்றது.

இந்த அன்பான இடைவெளியை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது? இதற்கு என்னிடம் ஒரே ஒரு பதில்தான் உள்ளது: புரிந்துகொள்ளுதல் மற்றும் பயிற்சி.

சிறிய அளவில் தொடங்குங்கள். ஒரு நகை அல்லது புகைப்படம் என மதிப்புமிக்க ஒன்றை கைகளில் வைத்துக்கொள்ளுங்கள். அது கிடைக்கப் பெற்றதற்கு நன்றி தெரிவியுங்கள். அதை இழந்துவிடுவதைப் பற்றிய கவலையை எண்ணிப் பாருங்கள். இப்போது அதை இறுக்கமாகப் பற்றிக்கொண்டிராமல், கைகளை கவனமாக தளர்த்திக்கொள்ளுங்கள். மூடிய கைப்பிடிக்குள் அதை



தெய்வீக நியதிக்கு உட்பட்ட அன்பினால் மட்டுமே இந்த மூன்று தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியும் என்று நான் எப்போதும் நினைப்பதுண்டு: வளர்ச்சியடைதல், அன்பு செலுத்துதல் மற்றும் சுதந்திரம் அளித்தல்.

இறுகப் பற்றிக்கொண்டிருப்பதற்கு பதிலாக, திறந்த கைகளில் அதை ஏந்திக் கொள்ளுங்கள். மதிப்பளிப்பதற்கும், உடைமையாக்கிக் கொள்வதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை கவனியுங்கள்.

உறவுமுறைகளை எண்ணிப்பாருங்கள். பயம், தேவை அல்லது எதிர்பார்ப்பினால், உறவுமுறைகளில் ஒருவரை நீங்கள் மிகவும் இறுக்கமாகப் பற்றிக்கொண்டிருப்பதாக எண்ணினால், அதன்மீது கவனம் செலுத்துங்கள். மற்றவரின் சுதந்திரத்தைப் போற்றுவதற்கு கற்றுக்கொள்ளுங்கள். அவர்களைத் தவிர்ப்பது அல்லது முழுவதுமாக விட்டுவிலகி இருப்பது என்றல்லாமல், நிபந்தனைகளின்றி அன்பு செலுத்துங்கள். சுதந்திரம் அளிப்பது, எவ்வாறு உண்மையான இணைப்பை பலவீனமாக்காமல், வலிமைமிக்கதாக மாற்றுகிறது என எண்ணிப் பாருங்கள்.

இறுதியாக, இதனை உங்களிடம் செய்துபாருங்கள். உங்களது அடையாளங்கள், கதைகள் மற்றும் காயங்களை கூட, நீங்கள் எவ்வாறு பற்றிக் கொண்டுள்ளீர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். உங்கள் பழைய பதிப்புகளை விட்டுவிடுங்கள். இனிமேலும் உங்களுக்கு உதவாத விஷயங்களை விட்டுவிட அனுமதியுங்கள். அதை உங்கள் மீதான வெறுப்பினால் அல்லாமல், உங்கள் மீதான அன்பினால் செய்யுங்கள்.

## இயற்கையின் கருணை கற்பிக்கும் பாடம்

நீங்கள் ஒரு நதியின் அருகே நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தால், அது உங்களுக்கு அனைத்தையும் கற்பித்துவிடும். நீரின் ஓட்டத்தை கவனியுங்கள். அது வருடுகின்ற பாறைகளையோ, தான் வளம் சேர்க்கும் கறைகளையோ

ஒருபோதும் பற்றிக்கொண்டு நின்றுவிடுவதில்லை. நதி, ஒவ்வொரு தருணமும் அனைத்தையும் வழங்கிக் கொண்டிருந்தாலும், எப்போதும் அதன் தன்மை மாறாமல் நிலைத்திருக்கும். அது தொடர்ந்து தன்னை அளித்தபடி சென்று, இறுதியில் கடலில் தனது இருப்பிடத்தைக் கண்டறிகிறது.

ஆனால் இயற்கை கற்பிக்கும் பாடங்கள் இன்னும் ஆழமானவை. இது பற்றி சற்று சிந்தியுங்கள்: ஒரு ஆரஞ்சு மரம், தான் வழங்கும் ஆரஞ்சு பழங்களுக்கு ஈடாக தினமும் காலையில் ஆரஞ்சு பழச்சாறு வேண்டுமென கேட்பதில்லை. ஒரு மாமரம் ஒருபோதும் மாம்பழச் சாற்றை கூலியாகக் கேட்பதில்லை. இது போன்ற மரங்கள் மிக எளிமையான விஷயங்களை எடுத்துக்கொண்டு, மிகச் சுவையான பழங்களை அன்பளிப்பாக வழங்குகின்றன. அவை இயற்கை உரங்களை மட்டுமே உண்டு, நீரினை அருந்தி, சூரிய ஒளியைப் பயன்படுத்திக் கொள்கின்றன.



நாம் இயற்கையைப் போல் இருக்க விரும்பினால், நமது செயல்களைத் தொடர்ந்து பண்படுத்தி, தேவையற்ற பணிகளை நீக்கி, நமது வலையமைப்பை தகர்த்து, மிகத் தூய்மையான நிலையை அடைய வேண்டும்.

ஒரு பசு, நமக்கு அளிக்கும் பாலுக்கு ஈடாக, பால் உட்பட வேறு எதையும் கேட்பதில்லை. அது புல்லை மட்டுமே உண்கிறது. ஆனால் நம்மில் சிலரோ, அதையே முழுவதும் உணவாக உண்டு, தன்னலமின்றி நமக்கு சேவை செய்யும் அத்தகைய ஜீவன்களின் இடுகாடாக, நம் வயிற்றினை மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? நாம் அனைத்திலும் சிறந்ததையே உட்கொள்கின்ற போதிலும், நாம் எதைத் திரும்ப அளிக்கின்றோம்? இந்தக் கேள்வி எனது சகாக்களை பலமுறை இடைநிறுத்தம் செய்து, சிந்திக்கத் தூண்டியுள்ளது.

தெய்வீக நியதிக்கு உட்பட்ட அன்பினால் மட்டுமே இந்த மூன்று தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியும் என்று நான் எப்போதும் நினைப்பதுண்டு: வளர்ச்சியடைதல், அன்பு செலுத்துதல் மற்றும் சுதந்திரம் அளித்தல். இயற்கை, அன்பை அடிப்படையாகக் கொண்டது. அது எதையும் கோராமல், அனைத்தையும் பகிர்ந்துகொள்கிறது. இதுவே பற்றில்லாத அன்பின் மிக உயர்ந்த நிலையாகும்.

இதுவே பற்றில்லாத அன்பு குறித்து இயற்கையின் மென்மையான செய்தியாகும். இது மிக அடிப்படையானதாக இருப்பதால், பெரும்பாலும் கவனிக்கப்படாமல் இருக்கின்றது.

வானில் மேகங்கள் நீர்த்துளிகளை சேகரித்து, அவற்றின் எடை அதிகரிக்கும்போது, அனைத்தையும் மழையாகப் பொழிகின்றன. இதனால் மேகம் சிறியதாகி விடுகிறதா? இல்லை. அது மென்மேலும் லகுவாகி, மாற்றமடைந்து, வானில் தொடர்ந்து மிதந்து செல்கிறது. மழைநீர் நதியாக மாற்றமடைந்து, விதைகளுக்கு ஊட்டமளித்து, பின் நீராவியாக எழுந்து, மீண்டும் மேகங்களை உருவாக்குகிறது.

உங்கள் சுவாசமும் இதைக் கற்பிக்கிறது. நீங்கள் சுவாசத்தை வெளிவிடும்போது, ஏதோ ஒன்று விட்டுச்செல்ல அனுமதிக்கிறீர்கள். நீங்கள் சுவாசத்தை உள்ளிழுக்கும்போது, ஏதோ ஒன்றை உள்ளே ஈர்த்துக் கொள்கிறீர்கள். நீங்கள்

சுவாசத்தை எப்போதும் உள்ளே தக்கவைத்துக் கொள்ள முயற்சி செய்தால், உயிர்சக்தி அதை எதிர்த்திடும். மனம் சில நேரங்களில் மறந்துவிடும் ஒன்றை, உடல் அறிந்துகொள்கிறது. பற்றிக்கொள்வதும், விட்டுவிலக அனுமதிப்பதும் வாழ்க்கை நடனத்தின் இரு பகுதிகளாகும்.

## நான்காவது நியமம்: இயற்கையின் வழி எளிமையானது

“இயற்கையுடன் இயைந்திருக்கும் வண்ணம் உங்கள் வாழ்க்கையை எளிமையாக்கிக் கொள்ளுங்கள்.” –பாபூஜி

வாழ்க்கையில் இந்தக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதே பரிணாம வளர்ச்சி அடைவதற்கான மிகத் துரிதமான வழியாகும்.

இயற்கை என்பது எளிமையாக இருப்பதைப் பற்றியது. அது ஆதிப்பரம்பொருளில் உள்ளுறைந்து இருந்தது, இன்னும் முழுமையாக வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருக்கிறது. இதுதான் இயற்கையின் உயிர்சக்தியாகும். உண்மையில் அது செயல்பாடுகள் அனைத்தும் தொடங்கும் ஆதிநிலையாகும். வாழ்க்கையில் எளிமையை அடைவதற்கான ஒரே வழி, சிக்கல்கள் அனைத்தையும் நீக்குவதுதான்.



அன்பு என்பது வரையறைக்கு உட்பட்டது அல்ல, அது தங்குதடையற்ற பிரவாகம் ஆகும். அது மீண்டும் கிடைக்கப் பெறுகின்ற, தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்ற, நில்லாமல் சென்றுகொண்டே இருக்கும், காற்றையும், நீரையும், ஒளியையும் போன்றது.

ஆனால் மனிதர்களாகிய நாம், இந்த எளிமையான விஷயத்தை மிகவும் சிக்கல் நிறைந்ததாக மாற்றிவிட்டோம். இயற்கையின் ஓட்டத்திற்கு எதிராக, எண்ணங்கள், ஆசைகள் மற்றும் செயல்களாலான வலையை நாம் உருவாக்கியுள்ளோம். நம் உணர்திறன்களில் ஒன்று, காற்றோட்டமான இடத்தில் நடப்பதற்கு அறிவுறுத்துகிறது, மற்றொன்று குளிரினால் உடல்நிலை பாதிக்கப்படும் என எச்சரிக்கிறது. ஒரு மனம், பொருள் ஈட்ட வேண்டுமென கூறுகிறது, அதே நேரம் மற்றொன்று, வேறொரு பாதையை தேர்வு செய் என கூறுகிறது. பாபூஜி, நாம் உருவாக்கியுள்ள இவற்றை முரண்பாடுடைய போக்குகளின் "முழுமையான கலவை" என்று அழைக்கிறார்.

ஆரஞ்சு மரத்திற்கு, இந்தப் பிரச்சினைகளைக் கையாள வேண்டிய அவசியமில்லை. பழத்தை வழங்குவதா, வேண்டாமா என்பது பற்றி அது சிந்திப்பதில்லை. பாலை சுரக்க வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி பசு சிந்திப்பதில்லை. இயற்கையைப் போன்று, அவையும் பரிபூரண எளிமையுடன் ஜீவிக்கின்றன.

நாமே பின்னிக்கொண்டுள்ள இந்த வலையைத் தகர்த்தெறிவதன் மூலம், "இயற்கையின் சாராம்சமான உள்ளுறைந்திருக்கும் சக்தியை மீண்டும் நமதாக்கிக் கொள்ள வேண்டும்". நாம் இயற்கையைப் போல் இருக்க விரும்பினால், நமது செயல்களைத் தொடர்ந்து பண்படுத்தி, தேவையற்ற பணிகளை நீக்கி, நமது வலையமைப்பை தகர்த்து, மிகத் தூய்மையான நிலையை அடைய வேண்டும்.

இதுதான் பற்றின்றி அன்புடன் இருத்தல் என்பதை செயல்படுத்துவதாகும். இது அதிகமான ஆன்மீகப் பயிற்சிகளைச் செய்வதைப் பற்றியது அல்ல;



நாம் விட்டுச்செல்ல அனுமதிக்கும் போது, அதிகமாகப் பெறுகிறோம். அப்போது மிகப் பெரிய பிரச்சினை தானாகவே மறைந்துவிடுகிறது. நாம் அதிக சுதந்திரம் அளிக்கும்போது, நமது பிணைப்புகள் அதிக வலிமை மிக்கதாக ஆகின்றன. நாம் விட்டுவிடும்போது வளர்ச்சி அடைகிறோம்.

தேவையில்லாத அனைத்தையும் நீக்குவதைப் பற்றியதாகும். இலையுதிர் காலத்தில் மரம் எவ்வாறு தன் இலைகள் விட்டுச்செல்ல அனுமதிக்கின்றதோ, அதைப் போன்று நாம் பின்னியுள்ள வலையை விட்டுவிலக நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இயற்கையுடன் ஒத்திசைந்து இருக்கும் வகையில், ஒரு எளிமையான வாழ்க்கை முறைக்கு நாம் மீண்டும் திரும்ப வேண்டும். நாம் மகிழ்ச்சியுடன் ஈடுபடுகின்ற அனைத்திலும் உள்ள "தேவை" எனும் அம்சத்தைப் பற்றி சற்றே சிந்தியுங்கள்.

## அதிஉன்னத உண்மை

இங்குதான் உண்மையான பிரச்சினை உள்ளது. ஆரஞ்சு மரம், எவ்வித பலனையும் எதிர்பாராமல், நிலம், நீர் மற்றும் சூரிய ஒளியை எடுத்துக்கொண்டு, சுவையான பழங்களைத் தருகிறது. பசு எதையும் எதிர்பாராமல், புல்லினை உண்டு அதை பாலாகத் தருகின்றது. எதைப் பற்றியும் சிந்திக்காமல் அளிக்கின்ற தன்மைகொண்ட அவையே, தெய்வீக நியதியின்படி செயல்படுபவை ஆகும்.

அனைத்திலும் சிறந்தவற்றையே உண்பவர்களான நாம், இந்த அடிப்படை விதிமுறையை பெரும்பாலும் மறந்துவிடுகிறோம். நாம் ஆரஞ்சு பழத்தின் சுவையையும், பசுவின் பாலையும்,

பூமியின் வளங்களையும் எடுத்துக் கொள்கிறோம், ஆனால் நாம் எதை அளிக்கிறோம்? இந்தக் கேள்வி நம்மை சிறுமையானவர்களாக உணரச் செய்து, நமது உண்மையான நோக்கத்தை நமக்கு நினைவூட்ட வேண்டும்.

நாம் விட்டுச்செல்ல அனுமதிக்கும்போது, அதிகமாகப் பெறுகிறோம். அப்போது மிகப் பெரிய பிரச்சினை தானாகவே மறைந்துவிடுகிறது. நாம் அதிக சுதந்திரம் அளிக்கும்போது, நமது பிணைப்புகள் அதிக வலிமை மிக்கதாக ஆகின்றன. நாம் விட்டுவிடும்போது வளர்ச்சி அடைகிறோம்.

இதில் எவ்வித திட்டமோ தந்திரமோ இருப்பதில்லை. இவ்வாறுதான் அன்பு செயல்படுகிறது, தெய்வீக நியதி இயங்குகிறது. அன்பு என்பது வரையறைக்கு உட்பட்டது அல்ல, அது தங்குதடையற்ற பிரவாகம் ஆகும். அது மீண்டும் கிடைக்கப் பெறுகின்ற, தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்ற, நில்லாமல் சென்றுகொண்டே இருக்கும், காற்றையும், நீரையும், ஒளியையும் போன்றது.

நாம் இந்த தெய்வீக நியதியைப் பின்பற்றி, பிரதிபலனாக எதையும் எதிர்பாராமல் அளிக்கும்போது, பற்றில்லாத அன்பு என்பது நாம் செய்கின்ற ஒரு செயல் அல்ல, அதுவே நாம் என்பதை உணர்வோம்.

## ஒப்புதல்

இறுதியாக, நாம் பற்றில்லாத அன்பை பயிற்சி செய்வதில்லை, நாம் அதைச் செய்கிறோம் என்பதை ஒப்புக்கொள்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் விலகிச் செல்ல முயற்சிக்கும் தனி மனிதர்கள் அல்ல. வாழ்க்கையானது, தொடர்ந்து

மாறிக்கொண்டு, விட்டுச்செல்ல அனுமதித்து, புதிய பரிமாணங்களில் தன்னையே நேசிக்கின்றது.

இந்தப் பிரபஞ்சமானது, உங்கள் ஒவ்வொரு சுவாசத்திலும் உங்களுடன் இருப்பதை விரும்புகிறது. ஒரு குழந்தையை, ஒரு கனவை அல்லது ஒரு தருணத்தை நீங்கள் விட்டுச்செல்ல அனுமதிக்கும்போது, நீங்கள் வாழ்க்கையின் ஓட்டத்துடன் ஒத்திசைந்து இருக்கிறீர்கள்.

நதி, இறுதியில் கடலைச் சென்றடையும் என்பதை நன்கு அறியும். மேகம், மழையாகப் பொழிந்து, வெறுமையாகி, பின் மீண்டும் உருவாகும் என்பதை அறியும். விதை, தான் வளர்ச்சியடைவதற்கு பிளவுபட வேண்டும் என்பதை அறியும். அன்பு என்பது விட்டுச்செல்ல அனுமதிப்பது எனவும், அன்புடன் விட்டுச்செல்ல அனுமதித்தல் என்பது அன்பாகவே மாறுவது எனவும், நம் மனதின் ஆழத்தில் நாமும் நன்கு அறிவோம்.

எளிமைத் தன்மையின் இந்த நிலையை நாம் அடையும்போது, “புலன்கள் அனைத்தும் ஐக்கியமாகிவிட்ட நிலையில், முந்தைய பதிவுகள் அனைத்தும் நீங்கியபின் எஞ்சி நிற்கும் ஒன்றுடன் ஒத்திருக்கும் நிலையை அவை அடையக்கூடும்”. அப்போதுதான் நாம் தெய்வீகத்துடன்



திறந்த கைகளுடன் நேசியுங்கள்.
அது ஆன்மீகமானது அல்லது
அறிவார்ந்தது என்பதினால் அல்ல.
ஆனால் அன்பு செலுத்துவதற்கு
அதுதான் ஒரே வழி. மூடிய
கைகளால், பொருட்களை
பிடித்துக்கொள்ள மட்டுமே முடியும்.
இந்தப் பிரபஞ்சம், திறந்திருக்கும்
கைகளில்தான் உள்ளது.

ஒத்திசைந்து இருப்பதாகவும், எளிமை, அன்பு மற்றும் எதிர்பார்ப்பின்றி வழங்கும் இயல்புடைய இயற்கையின் நியதியுடன், பூரணமான நல்லிணக்கத்துடன் வாழ்கிறோம் எனவும் எண்ணிக்கொள்ள முடியும்.

## அழைப்பு

இந்த வார்த்தைகளை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். அவை தங்களது பணியைச் செய்து முடித்த பின்னர், அவை விட்டுச்செல்ல அனுமதியுங்கள். அவை நினைவில்கொள்ள வேண்டியவை அல்ல; சிந்தனை ஓட்டத்திற்கான அழைப்புகள்.

விட்டுச்செல்ல அனுமதிப்பதற்கு நீங்கள் அஞ்சுகிறீர்கள் எனில், விட்டுச்செல்லவது புதிய வாழ்க்கையை அளிக்குமே அன்றி, இழப்பை அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். முடிவுகள் புதிய தொடக்கங்களுக்கு இட்டுச்செல்லும் என்பதை ஒவ்வொரு விடியலும் எடுத்துக் காட்டுகிறது. விட்டுச்செல்ல அனுமதித்தல், மென்மேலும் பெறுவதற்கு வழிவகுக்கும் என்பதை ஒவ்வொரு சுவாசமும் எடுத்துரைக்கிறது.

திறந்த கைகளுடன் நேசியுங்கள். அது ஆன்மீகமானது அல்லது அறிவார்ந்தது என்பதினால் அல்ல. ஆனால் அன்பு செலுத்துவதற்கு அதுதான் ஒரே வழி. மூடிய கைகளால், பொருட்களை பிடித்துக்கொள்ள மட்டுமே முடியும். இந்தப் பிரபஞ்சம், திறந்திருக்கும் கைகளில்தான் உள்ளது. நதிகள் கற்றுத் தருவதும், மேகங்கள் எடுத்துரைப்பதும், ஒவ்வொரு தாயின் இதயம் அறிந்துள்ளதும் இதுதான் - அன்பு செலுத்துதல் என்பது விட்டுச்செல்ல அனுமதிப்பதாகும். விட்டுச்செல்ல

அனுமதிப்பதில் நாம் தேடுகின்ற அன்பாகவே நாம் மாறிவிடுகின்றோம்.

இதுவே நாம் கற்க வேண்டிய பாடம். எளிதானது. செய்யக்கூடியது. என்றென்றும் நிலைத்திருப்பது.

அன்புடனும் மரியாதையுடனும்,
**கம்லேஷ்**

பூஜ்யஸ்ரீ சாரிஜி மகராஜ் அவர்களின்
98வது பிறந்தநாள் ஆண்டுவிழாவை முன்னிட்டு வழங்கப்பட்ட
அருட்செய்தி, கான்ஹா சாந்தி வனம், 24 ஜூலை 2025.

heartfulness
advancing in love

